முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 565**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

16.04.2021, வெள்ளிக்கிழமை

1. ஓங்காரக் குடில் படைத்து இந்த கலியுகத்தில்
ஓங்காரம் உலகளாவிய வண்ணம் பரவி
ஓங்கார சபை வளர்ச்சிகாண சேவையாற்றும்
ஓங்காரன் என் சக்தியே அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உனக்கு ஞான அறிவுரை ஆசி
தாழ்விலா உன் பதம் பற்றும் உலகோர்
தவத்தின் பலன் கிட்டி இனிதே கலியில்
3. கலியின் துன்பங்களை வென்று
கடைத்தேற்றம் பெறுவர் உறுதிஉறுதி
அழியாமை தருகின்ற மகாசக்தியாக
அறத்தின் பெரும் காவலனாக வந்துள்ள
4. உள்ளதொரு அரங்கன் உன் தர்மமே உலகை வெல்லும்
உயர்வான உந்தன் சன்மார்க்கக் கொள்கையே இந்த உலகை ஆளும்
வல்லமைபட உந்தனுக்கு ஆறுமுகன் யான்
வரம்தந்து வலு ஊட்டி இணைந்து நிற்க
5. நிற்கவே ஆறுமுகன் என் ஆக்கத்தின் மூலம்
நிலமதனில் உன் அவதாரத்தின் நோக்கம்
அற்புதம்பட வெற்றிகண்டு உலகமாற்றமாக
அரங்கன் உன் சக்தி தொண்டர்கள் படையாக பெருகி
6. பெருகியே கலியுகம் எங்கிலும் பேரிடர்கள் விலகி
பெருமைபட அரங்கன் உன் தலைமையின்கீழ்
வருங்காலம் அமைதி பாதுகாப்பும்
வையகத்தார்க்கு நம்பகத்தன்மையும் உருவாக்கி அற்புதம் தரும்
7. தருகின்ற சக்தியே உந்தனுக்கு யான்
தவமாக தக்க சூட்சும பலமாக வடிவேலன் யான் தந்துவருவதாலே
ஆறுமுக அரங்கமகா ஞானி எந்தன் சக்தியே
அகிலத்தார் உணர்ந்து அறிந்து தொடர்ந்தால் இந்த வையகம் சடுதி மேன்மை காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.